# தமிழோவியம்

வினா விடை

1. ஈரோடு தமிழன்பன் - ஆசிரியர் குறிப்பு தருக.

- எழுதியநூல் தமிழோவியம்.
- புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.
- ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
- 'வணக்கம் வள்ளுவ என்ற கவிதை நூலுக்கு 2004-ம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
- தமிழன்பன் கவிதைகள் - தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.
- இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம். ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

2. 'தமிழோவியம்' என்ற தலைப்பில் தமிழின் பெருமைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

- காலம் பிறப்பதற்கு முன் தோன்றியது நம் தமிழ்மொழி, இன்றும் நிலைத்திருக்கிறது.
- அகம், புறம் பற்றிக் கூறும் இலக்கியங்கள், ஐம்பெரும் மற்றும் ஐஞ்சிறு காப்பியங்கள் உள்ளன.
- அறியாமை இருளைப் போக்கும் நீதி இலக்கியங்கள் மற்றும் மனிதனின் சிறப்பைப் போற்றும் திருக்குறள் உள்ளன.
- பிற சமயங்களைப் போற்றிடும் இலக்கியங்கள் வளர்ந்தன.

- சித்தர்களின் அறிவுரைகள் போற்றப்படுகின்றன.
- விரலை மடக்கி வீணையை வாசிக்காது இசையில்லை என்று கூறுவது போல, நம்மை நாம் குறை கூறுவதை விட வேண்டும்.
- புதிய சிந்தனைக்கு வடிவம் கொடுத்து, பிறமொழி கலைச்சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்து நாம் தமிழை வளர்க்க வேண்டும்.